www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | |

## பொருளியல்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10**

1. LPGக்கு எதிரான வாதம் ................
அ) பொருளாதார வளர்ச்சி ஆ) அதிக முதலீடு
இ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு ஈ) நவீனமயமாக்கல்

2. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ........... ஆகும்.
அ) ஆலோசனைக்குழு ஆ) சட்டபூர்வமான குழு
இ) அ மற்றும் ஆ ஈ) எதுவுமில்லை

3. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் .............. ஏற்படுத்தப்பட்டது.
அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சி

4. தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை ................
அ) வேலையின்மை ஆ) மறைமுக வேலையின்மை
இ) முழு வேலை ஈ) சுய வேலை

5. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது ............
அ) நுட்பம் ஆ) சார்ந்திருப்பு இ) இரட்டை தன்மை ஈ) சமமின்மை

6. ஊரக பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரி அளவு ..............
அ) 2100 ஆ) 2200 இ) 2300 ஈ) 2400

7. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம் ...............
அ) கோயம்புத்தூர் ஆ) திருப்பூர் இ) ஈரோடு ஈ) கரூர்

8. எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது.
அ) சண்டிகர் ஆ) பாண்டிச்சேரி
இ) இலட்சத்தீவு ஈ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

9. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம் .............
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 7

10. தென்னக இரயில்வேயின் தலைமையிடம் ..............
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - ஆ

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 18க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 5×2=10

11. இந்தியப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தத்தை செயல்படுத்த காரணம் என்ன?
12. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?
13. ஊரக ஏழ்மை - வரையறு.
14. குடிசைத் தொழில் - வரையறு.
15. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கூறுக. விகிதங்களையும் குறிப்பிடுக.
16. தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் யாவை?
17. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?
18. இந்தியாவில் ஊரக மின்மயமாக்கலின் இரண்டு பாதக காரணிகளை கூறுக.

## பகுதி - இ

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 26க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5×3=15

19. உலகமயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி.
20. குளிர்பதன கிடங்கு பற்றி விளக்குக.
21. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை விளக்குக.
22. ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.
23. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.
24. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
25. தமிழ்நாட்டில் உள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?
26. SHGs யின் பண்புகளைக் கூறுக.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3×5=15

27. அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும், (SEZs) பண்புகளையும் விளக்குக.

(அல்லது)

ஆ) 2015 - 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

28. அ) ஊரகப் பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை - விவாதி.

(அல்லது)

ஆ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

29. அ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.



★★★ / ★★★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இரண்டாம் இடைப்பருவ தேர்வு 2023 - விடை குறிப்பு

## 11 ஆம் வகுப்பு - பொருளியல்

1) இ மக்கள் மற்றும் மண்டலங்கள் இடையே ஏற்றத்தாழ்வு

2) ஆ சட்டபூர்வமான குழு

3) இ காண்ட்லா

4) ஆ மறைமுக வேளாண்மை

5) இ இரட்டைத தன்மை

6) ஈ 2400

7) ஆ திருப்பூர்

8) ஆ பாண்டிச்சேரி

9) ஈ 3

10) ஆ சென்னை

## பகுதி ஆ

11) வெளிநாட்டு வாணிப கணக்கில் பேரிழப்பு ஏற்பட்டு இருந்தது எனவே இந்தியா நாட்டின் கட்டமைப்பு மேம்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தியது

12) பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதை குறிக்கும்

13) கிராமங்களில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையை ஊரக வறுமை எனலாம்

14) பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன இதன் மூலம் ஊரக மக்கள் முழு நேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள்

15) தேனி 900 தர்மபுரி 946

16) சென்னை எண்ணூர் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம்

17) கல்பாக்கம் கூடங்குளம்

18) நிதி பற்றாக்குறை மின் அனுப்பையில் ஏற்படும் இழப்பு மின் திருட்டு

www.Padasalai.Net

## பகுதி-இ

19) உள்நாட்டு பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது உலகமயமாக்கல் எனப்படும்

20) பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது விரைவில் அழுகும் தன்மை உடைய இப்ப பண்டங்களை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன இந்த பிரச்சினையை சமாளிக்க இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம் அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி குளிர்பதன கிடங்கு ஆணை 1964 என்பதை ஏற்படுத்தியது

21) ஜிஎஸ்டி என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வழியாகும் அதனுடைய நன்மைகள் அடுக்குவரி விளைவுகளை நீக்கியது ஒருமனை வழியாக உள்ளது இணைய வலி வசதி மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது தளவாடங்களின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது

22) ஊரக வேலையின்மையும் ஊரக வறுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் வேலை வாய்ப்பினை உருவாக்குவதால் மூலமாக வறுமையை ஒழிக்கலாம் வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்துதல் வேலை வாய்ப்பின்றி ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது

23) குறுங்கடன் வாங்குபவரையும் பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்த தன்மையை ஏற்படுத்துதல் கடன் வழங்கும் சிறுநீதி நிறுவனங்களுக்கு மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல் அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அதன் செயல்பாடுகளை தரம் நிர்ணயம் செய்தல் வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் வழங்குவதற்காக கடன் உத்தரவாத திட்டம் ஆரம்பித்தல்

24) தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும் மேலும் இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுகிறது இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது மொத்த ஏற்றுமதி வருவாயில் 35 சதவீதம் ஜவுளி துறையில் இருந்து கிடைக்கிறது பருத்தி பாலிஸ்டர் கலப்பு நூல் பட்டு நூல் போன்றவை இங்கிருந்து சீனா வங்கதேசம் போன்ற பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது நகரம் என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் பின்னல் ஆடைகளை ஏற்றுமதி செய்கிறது

25) தமிழ்நாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது கொண்ட மேட்டூர் மரவகந்தி பார்சன் வேலி ஆகியன முக்கியமானவை ஆகும் சூரிய சக்தி மின்சாரம் தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது தென்தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக கருதப்படுகிறது

காற்றாலை மின்சாரம் இந்திய அளவில் தமிழ்நாடு அதிக அளவு காற்றுவெளி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பை கொண்ட மாநிலமாக உள்ளது மேலும் காற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்க திருநெல்வேலி தூத்துக்குடியின் தெற்கு பகுதி மற்றும் ராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன

26) சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள் பெரும்பாலான சுய உதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை சுய உதவி குழுக்கள் தமக்கென்று வடிவமைக்கப்பட்ட சட்டங்களையும் விதிமுறைகளையும் கொண்டுள்ளனர் சுய உதவி குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர்

## பகுதி ஈ 5 marks

27) அ

அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல் பன்னாட்டு வியாபாரத்தில் உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல் கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் இயல்புகள் பாதுகாப்புடன் கூடிய நிலப் பகுதிகள் தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது நெறிமுறை படுத்தப்பட்ட நடைமுறைகள் தனிப்பட்ட விருப்ப பகுதியைக் கொண்டது தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது

27ஆ

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015 2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது இதன் சிறப்பு அம்சங்கள் ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும் இந்திய பொருட்களை ஊக்குவிக்கவும் இந்திய தயாரிப்பு என்ற கருத்தை உருவாக்கப்பட்டுள்ளது டிஜிட்டல் இந்தியா முறைப்படி வரி தாக்கல் முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி தயாரிக்கப்படுகின்றது ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை பாதுகாப்பு ராணுவ கிடங்கு விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவற்றை தொடர்பாக ஏற்றுமதி கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்கள் ஆகும் தற்போது உலக வர்த்தகத்தில் 3 சதவீதமாக இருக்கின்ற இந்தியாவின் பங்கை 2020 குள் இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

www.Padasalai.Net

28) அ

வேளாண்மையை சார்ந்துருத்தல் ஊரகப் பொருளாதாரம் இயற்கையையும் வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது ஊரக மக்களின் வாழ்க்கை முறை பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கை தரம் ஏழ்மை நிலையிலும் பரிதாபமாகவும் உள்ளது மக்கள் தொகை அடர்த்தி மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும் வீடுகள் கிராமம் முழுக்க பரவி காணப்படுகின்றன வேலைவாய்ப்பு பருவ கால வேலையின்மை மற்றும் குறைவேலை உடமை ஆகிய கிராமப்புறங்களில் நிலவுகின்றன வறுமை 2011 2012-இன் மதிப்புத்தின்படி ஊரகப்பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும் வறுமை கோட்டிற்கு இன்னும் வசிக்கின்றனர் கடன் சுமைகள் ஒரு இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே இருந்து கடனையே விட்டு செல்கிறான் எனவே கிராம மக்கள் கடனில் மூழ்கிய தற்கொலைக்கு ஆளாகின்றனர் ஏற்றத்தாழ்வு ஊரக பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன

28) ஆ

விவசாயிகளின் ஏழ்மை நிலை நுகருக்காகவும் விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்ப விழாக்களுக்காகவும் விவசாயிகளை கடன் பெற தூண்டுகிறது பருவ மழை பொய்த்தல் அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவதால் வாங்கிய கடனை திருப்பி செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர் வழக்குகள் நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள் அதிக வட்டி வீதம் உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது

29)அ

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடி இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12வது இடத்தில் உள்ளது நகரமை மாதலின் சராசரி அளவு தமிழகத்தில் 48.4 சதவீதமாக உள்ளது மொத்த மக்கள் தொகையில் ஆறு சதவீதத்தை கொண்டுள்ளது தமிழகம் இந்திய அளவில் நகர மக்கள் மொத்த மக்கள் தொகையில் 9.61 சதவீதமாக உள்ளது சமஸ்கீர் பாலின விகிதம் என்பது பெண்களின் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதை குறிக்கிறது தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இந்த விகிதம் மிக அதிகமாகும் பாலின விகிதத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் குறைவாக உள்ளது தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் 17 ஆகும் மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தை கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு 79 எண்ணிக்கை உடன் மூன்றாவது இடத்தில் உள்ளது இந்தியாவின் சராசரி ஆயுட்காலம் 67.9 ஆண்டுகள் ஆனால் தமிழ்நாட்டின் ஆயுட்காலம் 70.60 ஆண்டுகளாக உள்ளது

www.Padasalai.Net

29ஆ

தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது தமிழ்நாட்டில் உள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடி பகுதிகளை இணைக்கக்கூடிய தரமான சாலைப்போக்குவரத்தை கொண்டுள்ளது மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 536 கிலோ மீட்டர் தொலைவினை இணைக்கின்றன தங்க நாற்கர திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது சாலைப்போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது தமிழ்நாட்டில் உள்ள இருப்பு பாதையின் மொத்த நீளம் 6693 கிலோ மீட்டர் ஆகும் இதன்மூலம் இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கிறது சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்படப்பட்டுள்ளது பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது கோயம்புத்தூர் மதுரை திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன சென்னை எண்ணூர் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகியவை தமிழ்நாட்டில் மிகப்பெரிய துறைமுகங்கள் ஆகும் சென்னை துறைமுகம் கன்டைனர்களை கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கை துறைமுகம் ஆகும்.

Answer Key Prepared by,

சி சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஊசூர்

கே சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசினர் மேல்நிலைப்பள்ளி பணமடங்கி

www.Padasalai.Net